# கிளி/ஆதவன் முன்பள்ளி
# KN/ATHAVAN PRE SCHOOL

பதிவு எண் NPE KN/21

## எனது நண்பர்கள்
## MY FRIENDS

# 17வது ஆண்டு சிறப்பு மலர்



2012ம் ஆண்டு முன்பள்ளிக் கல்வியை நிறைவு செய்து பாடசாலை செல்லும் மாணவர்கள்.

கிளிநொச்சி. Kilinochchi.

கிளி / அ

# கிளி/ ஆதவன் முன்பள்ளி

# 17வது ஆண்டு மலர்



2012ல்
முன்பள்ளிக் கல்வியைப் பூர்த்தி செய்து
2013ல் தரம் 01ல் கால்பதிக்கும்
மாணவச்செல்வங்களின் புகைப்படங்களைத்
தாங்கிய
"எனது நண்பர்கள்"
எனும் மழலைகளின் மலர்
2012

# ஆதவன் முன்பள்ளிக் கீதம்

இராகம் – ஹம்சத்வனி
தாளம் – ஆதி

பல்லவி

வாழ்த்துவோம் வாழ்த்துவோம் வாழ்த்துவோமே
ஆதவன் முன்பள்ளி மாதாவை வாழ்த்துவோம்
(வாழ்த்..................)

சரணங்கள்

வன்னி நகர் கிளிநொச்சி வளங்கொழிக்கும் தரணியிலே
வந்துதித்துப் பணிசெய்யும் அழகுமிகு கதிரொளியே
நீலவர்ண ஜாலத்துடன் நின்றொளி பரப்பிடுவாய்
நித்தமும் பாலருக்குச் சங்கத்தமிழ் ஊட்டிடுவாய்
(வாழ்த்..................)

கடமை கண்ணியம் கட்டுப்பாட்டுணர்வுடனே
கல்விபல ஊட்டி வரும் ஆசிரியர் தலைமையிலே
அனுதினமும் அயராது அருந்தொண்டு ஆற்றிடுவாய்
அன்புடனே பாலர் எமை அரவணைத்துக் காத்திடுவாய்
(வாழ்த்..................)

அன்னை தந்தை தாழ்பணிந்து குரு தெய்வபக்தியுடன்
ஆன்றோர்கள் வாக்கை அருமருந்தாய் தினம் மென்று
நாளைய ஞாலமதில் நன்னெறிகள் தழைத்தோங்க
நற்பணிகள் ஆற்றக் கதாநாயகர்களைத் தந்திடுவாய்.
(வாழ்த்..................)

# தமிழ்மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!

வானமளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியே!

ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம்வீசி
இசைகொண்டு வாழியவே!

எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!

தொல்லை வினைதரு தொல்லையகன்று
சுடர்க தமிழ்நாடே!

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே!

வானம் அறிந்த தனைத்து மறிந்து
வளர்மொழி வாழியவே!



சுப்பிரமணியப்பாரதியார்.

# கிளி/ ஆதவன் முன்பள்ளி
# கிளிநொச்சி.

2012ம் ஆண்டு முன்பள்ளிக் கல்வியைப் பூர்த்தி செய்து 2013ம் ஆண்டு தரம் 1ல் கால்பதிக்கும் மாணவச் செல்வங்களை வாழ்த்தி வழியனுப்பும் வாழ்த்துப்பா

தத்தித் தத்தி நடைநடந்து தளிர்நாவால் கதைபகன்று
தித்திக்கப் புன்னகைத்து கல்வியுடன் கலைபயின்று
அன்பொழுகும் கலகலப்பால் ஆதவனை அலங்கரித்த
சின்னஞ்சிறு சிட்டுக்களே சிறகசைத்துப் போய்வருவீர்


கள்ளமில்லா உங்களது உள்ளமதை ஒப்ப இங்கு
வெள்ளைநிறக் காகிதமாய் உள்நுழைந்தீர் உவகையுடன்
எண்ணுடனே எழுத்தூட்டி எதிர்காலம் தனைக்காட்டி
விண்ணுயர வாழ்கவென வாழ்த்துகின்றோம் போய்வருவீர்

நீலவானம் உங்களது கைப்பிடிக்குள் சிக்கிவிட
ஞாலமது உங்களது காலடியைப் பின்தொடர
வழிகாட்டியாய் இருந்து வருங்காலத் தலைமையேற்க
ஒளியூட்டி அனுப்புகின்றோம் இளையவரே போய்வருவீர்

அத்திவாரம் இடப்பட்ட அடிப்படைக் கல்வியுடன்
புத்தியொடு விளையாட்டு நற்பழக்கம் தனை ஊட்டி
தரம் ஒன்று நோக்கி அன்புடனே அனுப்புகின்றோம்
கண்மணிகாள் கையசைத்துக் களிப்புடனே போய்வருவீர்

வாழ்க வாழ்க வளமுடன் வாழ்க
வையகம் தன்னில் இன்பமாய் வாழ்க
நாடு செழிக்க நாளும் உழைத்து
நீங்களும் உயர்ந்து நீடுழி வாழ்க

பெற்றோர்க்கும் கற்றோர்க்கும் பெருமை சேர்த்து
வாழ்வில் நீங்கள் உயர்ந்திடவே
வல்லான் இறையின் அருளும் ஆசியும்
எல்லாம் பெற்றிங்கு வாழியவே!



வாழ்த்துவோர்,
அதிபர், ஆசிரியர்கள்.
கிளி / ஆதவன் முன்பள்ளி.


2012ம் ஆண்டு முன்பள்ளிக்கல்வியை நிறைவு செய்து
பாடசாலை செல்லும் மாணவர்கள்.

# பெற்றோர் ஆசிரியர் சங்கம்

தலைவர் :- திரு. சிவசம்பு மகேந்திரராஜா

உபதலைவர் :- திரு. கதிரவேற்பிள்ளை சௌந்தரராஜன்

செயலாளர் :- திருமதி. சுகந்தி யோய்ப்பியசீலன்

உபசெயலாளர் :- திரு. மாரிமுத்து ஜெயசீலன்

பொருளாளர் :- திருமதி. சிவனேசன் பூமா

உறுப்பினர்கள் :- திருமதி. இலங்கநாதன் சிவாஜினி

திருமதி. நிசாந்தன் பிரியதர்சினி

திரு. புண்ணியமூர்த்தி ஜெகதீஸ்வரன்

திரு. சின்னத்தம்பி அகிலன்

திருமதி. இரவீந்திரராசா சசிகலா

திரு. வைத்திலிங்கம் சுபாஸ்கரன்

திரு. பரஞ்சோதி சிவகுமார்

திருமதி. சிறிறமணன் ஜானகி

# குழந்தைகளின் எதிர்காலம் ஒளிமயமாக வாழ்த்துகின்றேன்.

கிளிநொச்சி ஆதவன் முன்பள்ளி தனது பதினேழாவது அகவையைப் பூர்த்தி செய்து பதினெட்டாவது அகவையில் கால்பதிப்பதையிட்டு பெரும் மகிழ்வடைவோரில் நானும் ஒருவன்.

இக்காலப்பகுதியில் இம்முன்பள்ளி ஆயிரத்துக்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு கல்வியை வழங்கி ஆற்றலும் ஆளுமையும் மிக்க மாணவர்களை இன்று பாடசாலைகளிலும் பல்கலைகழகங்களிலும் பிரகாசிக்க வழிவகுத்துள்ளதையிட்டு பெருமகிழ்வடைகின்றேன்.

2012ல் முன்பள்ளிக் கல்வியைப்பூர்த்தி செய்து 2013ல் தரம் ஒன்றில் கால்பதிக்கும் முன்பள்ளிக் குழந்தைகளின் புகைப்படங்களையும் பல்வேறு ஆக்கங்களையும் தாங்கிவரும் 'எனது நண்பர்கள்' எனும் நூல் வெளிவருவதையிட்டு மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

அருகிருந்து 'அ' எழுதிய நண்பர்களை என்றும் தம் வாழ்க்கைபூராகவும் நினைத்தும் அன்பையும் நட்பையும் பேணவும் ஒருவருக்கொருவர் உதவவும் இந்நூல் வழிசமைத்துக் கொடுக்கும் என்பதில் ஐயமில்லை. அத்துடன் இந்நூல் தாங்கிவரும் ஆக்கங்களும் ஆரம்பக்கல்வி மாணவர்களுக்கு பக்கபலமாக நின்று உதவும் என்று எண்ணுகின்றேன்.

இந்நூல் சிறப்பாக வெளிவரவும் குழந்தைகளின் எதிர்காலம் பிரகாசிக்கவும் இறைவன் பாதங்களைப் பணிந்து நிற்கின்றேன்.

நன்றி.



சிவசம்பு மகேந்திரராஜா
கிளி/ ஆதவன் முன்பள்ளி



# ஆசிச்செய்தி


கடல் அலையைப் போல் வீழ்வதும் பின் எழுவதுமாக சக்கரம்போன்று மாறிமாறி இக்கிளி நகரத்தை ஆட்டிப்படைக்கும் இடப்பெயர்வும், மீள்குடியேற்றமுமாக பல தடவைகள் அரங்கேறிய போதும் தன் நிகரோடும் தனக்கு என ஒரு தனியான நிலையான இடத்தை இந்த கிளி நகருக்குள் தக்க வைத்துக் கொண்டு தனது பணியை ஆற்றிவரும் இவ் ஆதவன் முன்பள்ளி இன்நன்நாளில் 17 வது அகவையில் காலடி ஊன்றுவதையும், இவ் வருடத்திற்கான "எனது நண்பர்கள்" எனும் மலருக்கு வாசம் சேர்க்குமுகமாக எனது ஆசிச் செய்தி வழங்குவதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

வாழ்வியல் பருவத்தின் ஆணிவேர்ப்பருவமாகிய குழந்தைப் பருவத்தை சிறப்பாகவும், செம்மையாகவும், நன்நெறியோடும் மையம் கொண்டு எழும் பருவத்தை மென்மையாகக் கையாண்டு சிறந்த மேதாவிகளை விளைவிக்கின்ற ஒரு கருவிடமாக இவ் ஆதவன் முன்பள்ளி திகழ்கின்றது.

கல்விசார், உளவியல் சார் ஆய்வாளர்களின் கருத்துப்படி ஒரு குழந்தையின் உடல், உளம், மூளைவளர்ச்சி, சமூகவெழுச்சி செயற்பாடுகள் அனைத்தும் விறுவிறுப்புடனும், சுறுசுறுப்புடனும், தெளிவாகவும், செயற்படுகின்ற பருவமே 03-05 அகவைப்பருவமாகும். இப்பருவத்தை பக்குவமாகவும், கச்சிதமாகவும், ஒழுக்கமாகவும் பயன்படுத்தும் சிறந்த ஆசான்களை பயன்படுத்தி பரந்த அளவில் பணியாற்றி வருகிறது.

ஆதவன் இடத்தில் தடம் பதிக்க பெற்றோர்களும், கல்வி சார் நலன் விரும்பிகளும், முன்பள்ளி நிர்வாகத்தினரும், நேர்மையாகவும், நேர்த்தியாகவும், நட்பியலாகவும் சேவையாற்றி ஊக்கமளித்து வளர்ச்சிக்கு பங்களித்து வருவதை நாம் மீண்டும் பாராட்ட வேண்டும் என்பதே எனது சிந்தனை.

இந்த மலரின் ஆக்கம், திறமை, வெளிப்பாடு, நிழற்படம் அனைத்தையும் தாங்கி வெளிவருவது சிறப்பான செயற்பாடுகளே என்பதுடன் இவ்வாறான முயற்சிகளில் ஈடுபட்டுள்ள ஆதவன் முன்பள்ளி நிர்வாகப் பணிப்பாளர் திரு.சிவசம்பு மகேந்திரன் அவர்களையும், இந்த நூலை ஆக்குவதற்கு உதவிய ஆசிரியர்கள், முன்பள்ளி நிர்வாகத்தினர் அனைவரையும் பாராட்டி இந்நூல் சிறப்பாக வெளிவர எனது இன்நேர ஆசிச்செய்தியை தெரிவித்துக் கொள்வதில் பூரண மகிழ்ச்சியடைகின்றேன்.



திரு.க. முருகவேல்.
வலயக்கல்விப் பணிப்பாளர்,
வலயக்கல்வி அலுவலகம்,
கிளிநொச்சி.

## "என்றும் பிரகாசமாய் ஒளி வீச ஆதவனுக்கு வாழ்த்துக்கள்"

"குழந்தையும் தெய்வமும்
குணத்தால் ஒன்று!
குற்றங்களை மறந்துவிடும்
மனத்தால் ஒன்று!


தங்கமனம் கொண்ட "ஆதவன்" முன்பள்ளிச் சிறார்களின் பதினெழாவது மலராக மலர்ந்து மணம் வீசும் "எனது நண்பர்கள்" என்னும் இந்நூலுக்கு வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் பேருவகையடைகின்றேன். "உயிர்க்கரு பத்துத்திங்கள் சுமை" உளக்கருவுக்கு காலக்கணக்கில்லை. உண்மையில் எமது கரைச்சிப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட முன்பள்ளிகள் அனைத்தும் முன்மாதிரியான முன்பள்ளிகளாகத் திகழவேண்டும் என்பது எனது நீண்ட கால அவாவாகும். இதற்கு தக்க எடுத்துக்காட்டாக "ஆதவன் முன்பள்ளிச்சமூகம்" வானளாவ வளர்ந்து வருகின்றது எனின் அது மிகையாகாது.

தாய்மடியின் அரவணைப்பிலிருந்து கீழ் இறங்கும் குழந்தைகளை சமூகம் அரவணைக்கும் முதன்மையான இடம் முன்பள்ளியாகும். இவ் முன்பள்ளிகளை முன்னுதாரணமான கல்விக்கூடமாக்குவதற்கு முன்பள்ளி நிர்வாகிகளினதும், முன்பள்ளி ஆசிரியர்களதும் சேவை அளப்பெரியதாகும். இவ்விடத்தில் ஆதவன் முன்பள்ளி நிர்வாகத்தினதும், ஆதவன் முன்பள்ளி ஆசிரியர்களதும் சேவையினை எடுத்துக்கூறுவது என்பது ஆற்றங்கரை மணலை எண்ண நினைப்பது போலாகும் எனின் சந்தேகமன்று.

மழலைகள் மொட்டவிழ்ந்து மலராகும் முன்பள்ளிக்கூடம் மனிதவாழ்வின் மிகமுக்கியமான காலகட்டமாகும். ஏனெனில் நாளைய இச்சமூகத்தை கட்டியாளும் கல்விமான்களையும், ஒழுக்கசீலர்களையும் உருவாக்குவதன் பெரும்பங்கு முன்பள்ளிக் கூடங்களிலேயே தங்கியுள்ளது. அந்தவகையில் ஆகாயத்தின் அடிவானில் உதித்தெழுந்து பிரகாசிக்கும் ஆதவன் போல எமது ஆதவன் முன்பள்ளியும் மேன்மேலும் கல்வி உலகிலே என்றும் நிலைத்திருந்து ஒளி வீசவேண்டும் என என் உளமார வாழ்த்தி நிற்கின்றேன்.

"கல்வி என்பது தனிமனிதனின் சுதந்திரத்தை விருத்திசெய்யும் ஒரு கருவியாகும். கல்வியின் மூலமே மனிதன் பூரண சுதந்திரம் பெறுகின்றான். நலம் பெறும் கல்வியானது எமது சுதந்திரத்தைப் பற்றிய பயிற்சியாக அமைதல் வேண்டும். இந்தவகையில் சிறப்பான கல்விப்பயணத்தின் அடி அத்திவாரமாக மிளிரும் முன்பள்ளிக் கல்வியை ஆதவன் முன்பள்ளியானது தனக்கெனத் தன்னிகர் இல்லாப் பெருமையுடன் வழிநடத்திச் செல்கின்றது எனின் அதனை யாரும் யாரோடு மறுக்கவோ மறைக்கவோ முடியாத உண்மை எனலாம்.

"வாழ்க.........வளர்க................ ஆதவன் முன்பள்ளிச் சமூகம்"



வாழ்த்துக்களுடன்
திரு. கோபாலப்பிள்ளை நாகேஸ்வரன் (SLAS)
பிரதேச செயலாளர்,
கரைச்சி.
கிளிநொச்சி.


## "கல்வி ஒளி வீசும் ஆதவனுக்கு என் வாழ்த்துக்கள்"

"..........அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல் ஆலயம்
பதினோராயிரம் நாட்டல்
பின்னர் உள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்." என்றான் பாரதி.

கடந்த 17 வருடங்களாக எமது கிளிநொச்சி மாவட்டத்தில் முன்பள்ளி சேவையை மிகவும் சிறப்பாக ஆற்றிவரும் ஆதவன் முன்பள்ளியின் இம்மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் நான் மிகவும் பெருமையடைகின்றேன். சமூகத்தின் பல்வேறு மட்டங்களிலும் வேறுபட்ட குடும்ப சூழல்களில் இருந்து வரும் குழந்தைகளைக் கற்றல் சூழலுக்கு இயல்புபடுத்தி அவர்களைப் பாடசாலைக்கு பிரசவிக்கும் இடமாக முன்பள்ளிகள் திகழ்கின்றன. அந்த வகையில் கிளிநொச்சி மாவட்டத்தில் பல பிரபல்யமான பாடசாலைகளுக்குப் பிள்ளைகளை வழங்கும் முன்பள்ளியாக இந்த ஆதவன் முன்பள்ளி நிலையம் விளங்குகின்றது என்றால் மிகையாகாது.

கடந்த கால அனர்த்தங்களின் போது பல்வேறு இன்னல்களை இது கடந்து நின்றபோதும் சற்றேனும் தளர்வின்றி தனது கல்விச்சேவையை எம் மண்ணில் இந்நிலையம் வழங்கி நிற்கின்றது. இதற்குக் காரணமான இந்நிலைய நிர்வாகி திரு.சி. மகேந்திரன் அவர்களையும் அர்ப்பணிப்பான சேவையினை வழங்கிவரும் ஆசிரியர் குழாமினரையும் இச்சந்தர்ப்பத்தில் மனம் நிறைந்து நன்றியோடு பாராட்டுகின்றேன்.

இம்மலர் தாங்கி நிற்கும் மழலைகளின் ஆக்கங்கள் இந்நிலையம் இவர்களின் ஆளுமையில் செலுத்திய செல்வாக்கினை பறைசாற்றி நிற்கின்றன. ஐந்து வயதினுள் இவர்கள் அடையும் ஆரோக்கியமான அனுபவங்கள் அவர்களின் எதிர்காலத்தைச் சிறப்புறச் செதுக்கும் உளிகளாகும். எனவே இவர்களை உள்வாங்கும் பாடசாலைகள் மிகச்சிறந்த சாதனைகளை நிலைநாட்ட முடியும் என்பதில் ஐயமில்லை. எனவே ஆதவன் முன்பள்ளி நிலையத்தின் சேவை தொடர்ந்தும் எம் மண்ணிற்கு சிறப்பாக கிடைத்து எமது வன்னி மண்ணின் கல்விப்பாரம்பரியம் சிறந்து விளங்க எல்லாம் வல்ல இறைவனின் ஆசிகளை வேண்டி நிற்கின்றேன்.



**திருமதி. ஜெயந்தி தனபாலசிங்கம்,**
**அதிபர்,**
**கிளி / புனித திரேசா பெண்கள் கல்லூரி.**
**கிளிநொச்சி.**

# ஆசிச்செய்தி

வடமாகாணத்தில் முக்கியமான காலத்தில் எல்லா வகையிலும் முக்கியமாக கருதப்படும் கிளிநொச்சி மாவட்டத்தில் ஆதவன் முன்பள்ளி 17 வருடகாலமாக சிறுவர்களுக்கு அளப்பரிய பணியாற்றி வருகின்றது. எமது மாவட்டத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டு மீள்குடியேற்றம் நடைபெற்று மூன்று ஆண்டு காலம் நிறைவடையும் நிலையில் ஆதவன் முன்பள்ளி சிறார்களுக்கு கல்வி, விளையாட்டு போன்ற செயற்பாடுகளை மேற்கொண்டு மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் பெரும் பங்காற்றி வருகின்றது. இந்நிலையில் 17வது ஆண்டு நிறைவையிட்டு வெளிவரும் "எனது நண்பர்கள்" என்ற நூல் சிறந்த ஆவணமாக விளங்க நல்லாசியும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன்.

திரு. இ. செந்தூரன்.
மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அலுவலர்,
தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை.
மாவட்டச் செயலகம்,
கிளிநொச்சி.



## எங்கள் குடும்பம்




எங்கள் இன்பக் குடும்பம் - அதை
எண்ணும் போதும் இன்பம்
தங்கத் தாத்தா தலைமை - இனிது
தாங்கும் எங்கள் குடும்பம்

உழைத்து வருவார் அப்பா - அன்பு
ஊட்டி வளர்ப்பார் அம்மா
அழைக்க மாமா மாமி - வந்து
அன்பாய் முன்னே நிற்பார்

சின்னச் சின்னக் கதைகள் தினமும் - பாட்டி
சொல்வாள் இனிதாய் எமக்கு
அண்ணன் தம்பி அக்கா - சேர்ந்து
அன்பாய் வாழும் குடும்பம்

**சி. அருணன்**



**ஓரெழுத்துச் சொற்கள்**
கை, தை, வா, போ, நீ, பூ, தா, தீ, ஈ

**ஈரெழுத்துச் சொற்கள்**
கண், ஊர், கால், காய், குடை, கிளி, காது

**மூவெழுத்துச் சொற்கள்**
உரல், குளம், கிணறு, குதிரை, சீப்பு, முத்து, பட்டு

**நான்கெழுத்துச் சொற்கள்**
எறும்பு, மிளகாய், சிங்கம், இனிப்பு, விளக்கு, பட்டம், அதிபர்

**ஐந்தெழுத்துச் சொற்கள்**
புத்தகம், ஆசிரியர், பெரியவர், மண்டபம், ஒட்டகம், மாம்பழம், விளையாட்டு

**சா. செஞ்சேரன்**

## மணிவாத்து

குள்ளக் குள்ள வாத்து
குவாக் குவா வாத்து
பள்ளத் தண்ணீர் கண்டால்
பாய்ந்து நீந்தும் வாத்து

மெல்ல உடலை சாய்த்து
மேலும் கீழும் பார்த்து
செல்லமாக நடக்கும்
சின்ன மணி வாத்து



பி. தீபிகன்



## My Pet

My pet is dog.
It's name is Puppy.
It is a playful dog.
It likes to eat meat.
I love my pet very much.

**S. Thikaliny**

## Requests


- May I Come in/ go out?
- Silence Please
- Listen to me
- Hurry up please
- Be Quiet
- Be careful

## Praising

- Good
- Very Good
- Well Done
- That's Right
- I Like it.



**K. Narmisha**



**வீடு எங்கே**

வண்ணக் கிளியே வீடெங்கே?
மரத்துப் பொந்தே என்வீடு.

தூக்கணாங் குருவி வீடெங்கே?
தொங்குது மரத்தில் என்வீடு.

கறுப்புக் காகமே வீடெங்கே?
கட்டுவேன் மரத்தில் என்வீடு.

பொல்லாத பாம்பே வீடெங்கே?
புற்றும் புதரும் என்வீடு.

கடு கடு சிங்கமே வீடெங்கே?
காட்டுக் குகையே என்வீடு.

நகரும் நத்தையே வீடெங்கே?
நகருதே என்னுடன் என்வீடு.

**எ. சதுசனன்**

## உணவுகளும் அதன் பயன்பாடும்

| சக்தி தரும் உணவுகள் | உடலை வளர்க்கும் உணவுகள் |
|---|---|
| சோறு, பலாக்காய், ஈரப்பலா, கிழங்கு வகை, அப்பம், குரக்கன் பிட்டு, ரொட்டி, இடியப்பம், பாண், சீனி, கருப்பட்டி, தேங்காயெண்ணெய். | பால், சோயாப்பால், முட்டை, இறைச்சி, மீன், கருவாடு, பருப்பு, பயறு, சோயா அவரை, கடலை. |



நோய்களிலிருந்து பாதுகாக்கும் உணவுகள்

வல்லாரை, பசளி, பொன்னாங்காணி, வெண்டி, கரட், மாம்பழம், அன்னாசி, வாழைப்பழம், தோடம்பழம்.

**வ. நபிஷன்**

## நோய்களும் அவற்றைப் பரப்பும் பிராணிகளும்

| நோய்கள் | நோய்க்கிருமிகளைக் கொண்டுவரும் பிராணி |
|---|---|
| 1. மலேரியா | நுளம்பு - அனோபிளஸ் |
| 2. டெங்கு | நுளம்பு - எய்டிஸ் |
| 3. சிக்குன்குன்யா | நுளம்பு - எய்டிஸ் |
| 4. கழிச்சல் நோய் | ஈ |
| 5. விசர்நாய்க்கடி | நாய், பூனை, நரி, குரங்கு |
| 6. கொள்ளை நோய் | எலி |
| 7. ஆனைக்கால் நோய் | நுளம்பு - கியுலெக்ஸ் |



அ. அகல்யன்

## புது வருடம்



சித்திரை ஆண்டே வா வா வா
சின்னவர் எமக்கு இன்பம் தா
உற்றவர் எல்லாம் சேரலாம்
உந்தன் வரவால் மகிழலாம்.

ஊஞ்சல் கட்டி ஆடலாம்
உயரப் பட்டம் ஏற்றலாம்
சித்திரை என்றால் பலகாரம்
சின்னவர் எமக்கு புது ஆடை


நித்திரை விட்டு எழுந்தவுடன்
சாத்திர முறையில் நீராடல்
புத்தம் புதிய ஆடையுடன்
கோயில் போவோம் கடை போவோம்

அப்பா தருவார் கைவிசேடம்
அம்மா தருவாள் முத்தங்கள்.

சி. மதுவிழியன்

ஆதவன் முன்பள்ளிச்சிறார்களின் வருடாந்த விளையாட்டு
நிகழ்வுகள் – 2012








ஆதவன் முன்பள்ளிச்சிறார்களின் வருடாந்த கலைவிழா
நிகழ்வுகள் – 2012

















## தாய்ப்பறவையின் பாடல்

சின்னச் சின்னக் குருவிகள்
வண்ண வண்ணக் குருவிகள்
எல்லோரும் வாருங்கள்
என் கதையைக் கேளுங்கள்.



கடுமையான காற்றினால்
என் கூடு சிதையவே
என் அருமைக் குஞ்சுகள்
நிலத்தில் தானே விழுந்தன.

குஞ்சுகளின் அவலக் குரலை
ராமன் வீரன் கேட்டனர்
விரைந்து வந்து குஞ்சுகளை
தூக்கிக் கூட்டில் இட்டனர்.

ஆபத்தில் உதவியவரை
என்றும் நாம் மறவோமே
அவர்களுக்கு நன்றி சொல்வோம்
அது எமது கடமையே.

யே. ஜனார்த்தனன்

## நீ பேசு



கண்ணே! மணியே! நீ பேசு
கனிவாய் திறந்து நீ பேசு

'அம்மா! அப்பா' 'பாப்பா!' என்று
செம்மத் தமிழில் நீ பேசு!

'தாத்தா! பாட்டி' 'மாமா!' என்று
சந்தத் தமிழில் நீ பேசு!

மழலை சிறக்க நீ பேசு!
மணிமொழியாக நீ பேசு!

எண்ணம் வாழ நீ பேசு!
இலக்கியம் வாழ நீ பேசு!

லூ. எல்கானான்

## இலங்கையின் இலச்சினை



"சகல சௌபாக்கியங்களையும் கொண்ட தன்னிறைவான, இந்நாட்டில் சூரியனும், சந்திரனும் காலமெல்லாம், தார்மீகத்தைக் காத்தவாறு நாட்டுமக்கள் யாவரும் இருப்பார்களாக" எனும் கருத்தே நாட்டில் இலச்சினையால் காட்டப்படுகின்றது.




நிறைகுடம் : சௌபாக்கியம்
நெற்கதிர்கள் : தன்னிறைவு
தர்மசக்கரம் : தார்மீகம்
மலரிதழ் : தூய்மை
சூரியன், சந்திரன் : நிலைத்திருப்பு
பூ இதழ்களால் சூழப்பட்டு, கையில் வாளுடன் நிற்கும் சிங்கம் : நாட்டையும் கட்டுப்பாடான நாட்டு மக்களையும் குறிக்கிறது.

**சி. டினோஜன்**

## எங்கள் பாட்டி



எங்கள் பாட்டி மூதாட்டி
தடியூண்டி நடந்திடுவாள்
அம்மா பாட்டியைக் குளிப்பாட்டி
உணவை ஊட்டி விட்டிடுவாள்
ஒருநாள் பாட்டியின் கைத்தடியோ
கீழே விழுந்து விட்டதுவே.
நானும் விரைந்து ஓடியே
அதனை எடுத்துக் கொடுத்திட்டேன்
என்முதுகில் பாட்டியுமே
தட்டித் தட்டிப் பாராட்டினாள்.

**வி. கயல்வேந்தன்**

## அழைப்பிதழ் (மாதிரி)

ஆதவன் முன்பள்ளி மாணவர்களின் கண்காட்சி - 2012

இடம் : முன்பள்ளி

காலம் : ஏப்ரல் 18, 19 மற்றும் 20ஆம் திகதி

காலை 9.00 தொடக்கம் மாலை 4.30 வரை.



பிரதம அதிதி

திரு. க. முருகவேல்

(வலயக்கல்விப் பணிப்பாளர்)

இக்கண்காட்சியைப் பார்வையிட

வருமாறு தங்களை அன்புடன்

அழைக்கின்றோம்.

கனகபுரம்,
கிளிநொச்சி.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

**க. திவ்வியன்**

## மழை



பொழிக பொழிக மழையே நீ
பூமி எங்கும் குளிர்ந்திட
வருக வருக மழையே நீ
வாடிய பயிர்கள் செழித்திட..

பெய்க பெய்க மழையே நீ
பெரும் பயிர்கள் வளர்ந்திட
விரைக விரைக மழையே நீ
விரைவாய் குளங்கள் நிரம்பிட

வழிக வழிக மழையே நீ
வயல் நிலங்கள் விரிந்திட
விரைந்து வருக மழையே நீ
வறிய மக்கள் குறை போக்க.

**சு. சாதுரியன்**

## தாவரங்கள்



உங்களுக்கு
உண்ணக் காய்கறி
உறங்கக் கட்டிலுமே
இன்னும் எத்தனை எத்தனையோ
எண்ணி எண்ணிப் பாருங்கள்

நாங்களும் உயிரிகள் தானன்றோ
எங்களுக்கும் பசி எடுக்காதோ
தாகமும் தான் ஏற்படாதோ
இந்த உண்மை தெரியாதோ?



நாங்கள் உண்டாவதாலேயே
நீங்களும் உண்டு வாழ்கின்றீர்
நாங்கள் நலமாய் வாழ்ந்தால் தான்
நீங்களும் நீண்டகாலம் வாழ்ந்திடலாம்.

அதனால் தான் சொல்கின்றோம்
எங்களுக்குப் பசளை தாருங்கள்.
நீர் நன்கு ஊற்றுங்கள்.

நாங்கள் செழிப்பாய் வளர்ந்திட்டால்
பற்பல பயன்கள் தந்திடுவோம்.

**ஜெ. கலையகன்**



## Greeting and Wishes

- Good Morning
- Good Afternoon
- Good Evening
- Good Bye
- Good luck
- All the best
- Happy Birthday
- Happy Newyear
- Mery Chrismas

**R. Vasikaran**

ஆதவன் முன்பள்ளிச்சிறார்களின் வருடாந்த விளையாட்டு நிகழ்வின் ஆரம்ப நிகழ்வுகள் – 2012
















## The Thirsty Crow




The thirsty crow flew all over the land for a little water. Prolonged drought had sucked waters from ponds, lakes, rivers and reservoirs. The crow could not find even a drop to drink.

Then he noticed a pitcher of water in front of a hut. He flew down on it to quench his thirst. But there was only a little water at the bottom of the jug. His beak was too short to reach the level of water in the jug. But he did not give up hope. He picked up stones from the ground and dropped them in the jug. As the stones gathered at the bottom of the jug the water level rose. He drank to his heart's content.

**Moral: Nothing ever is achived by sheer luck.**

**S. Pavisan**

## Simple Question forms



Who is shouting?
What's this?
What's that?
Are you ready?
What are they?
Is it your...... ?
Is it a..... ?

## Simple commands

Hand Up/ down
Run
Jump
Start
Stop

Clap your hands
look at me
Don't go out
Get ready

**N. Kokilan**

## ஒலி, ஒளி சாதனம்



விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களில் தொலைக்காட்சியும் ஒன்றாகும். இது ஒலியும் ஒளியும் இணைந்த சாதனமாகும். இன்று தொலைக்காட்சி உலகின் முக்கிய ஊடகமாக மாறிவிட்டது.

வானொலியில் ஒலியை மட்டும் கேட்க முடியும். காட்சிகளைப் பார்க்க முடியாது. ஆனால் தொலைக்காட்சியில் தொலைவில் ஒளிபரப்பாகும் நிகழ்ச்சிகளையும், காட்சிகளையும் பார்த்தும் கேட்டும் மகிழலாம்.


தொலைக்காட்சி மூலம் உலக நிகழ்ச்சிகளை வீட்டில் இருந்தே காணமுடியும். விளையாட்டு நிகழ்ச்சிகளைப் பார்க்கலாம். இசை, நாடகம், திரைப்படம் போன்ற பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளையும் பார்த்து மகிழலாம்.

இயற்கைக் காட்சிகளையும், விநோதமான காட்சிகளையும் காணலாம். கல்வி நிகழ்ச்சிகளைப் பார்த்து விளக்கமும் பெறலாம். தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை அதன் அருகில் இருந்து பார்க்கக் கூடாது. வெளிச்சம் உள்ள அறையில் சற்றுத் தொலைவில் இருந்தே பார்க்க வேண்டும்.

தொலைக்காட்சியில் நமக்குப் பயனுள்ள நிகழ்ச்சிகளை மட்டுமே பார்க்க வேண்டும்.

**சி. நித்திலன்**

## நூலகம்



நூலகம் என்பது தேன்கூடு
நூல் ஒவ்வொன்றும் தேன் துளிகள்!
நூலகம் என்பது பூங்காடு
நூறாயிரமாம் நன்மலர்கள்!

நூலகம் என்பது பழத்தோப்பு
நூல் ஒவ்வொன்றும் தீங்கனிகள்!
நூலகம் என்பது தனி உலகம்
நுழைந்தால் புதுப்புது அனுபவங்கள்!

**கு. கிஷாந்**

## Fight over Nothing




Two goats came face to face while crossing a narrow bridge. "Let me pass," requested one of them. "Never, you get out of my way," retorted the other. Unable to reach a compromise they charged at each other. In the ensuring scuffle they lost their balance and fell into the stream down below. The swift currents carried them away to their ultimate death. The scene was repeated a few days later. Both these goats were wise and patient. They made way for each other to cross the narrow bridge. By a sensible compromise both reached their destination safely.

**Moral: Better bend than break.**

**V. Anpan**

## பல பொருள் ஒரு மொழி



| | | |
|---|---|---|
| அரங்கம் | : | சபை, போர்க்களம், கல்விச்சாலை |
| ஆழி | : | கடல், சாக்கரம், மோதிரம் |
| இதழ் | : | உதடு, பூவிதழ், புத்தகத்தின் தாள், கண்ணிமை |
| ஏடு | : | பாலாடை, ஏட்டுப் புத்தகம், பூவிதழ், கண்ணிமை |
| கண்டம் | : | கழுத்து, ஆபத்து, துண்டம் |
| கதிர் | : | சூரியன், கிரணம், பயிர்க்கதிர் |
| கரி | : | கருமை, சாட்சி, யானை |
| கோதை | : | பெண், பூமாலை, குழல் |
| சுருதி | : | வேதம், சுதி, ஒலி, மந்திரம், இசை |
| பணி | : | ஆபரணம், தொண்டு, தொழில், பாம்பு |

**ஐ. தேனிலவன்**

## அடைமொழி

ஒரு கருத்து, விரிவாகவும் தெளிவாகவும் புலப்படுத்துவதற்கு அடைமொழிகள் பயன்படுகின்றன.



எழுவாய் அடைமொழி

எழுவாயின் பல்வகைத் தன்மை விளக்கம் எழுவாய் அடைமொழி எனப்படும்.

உதாரணம் : பச்சைக்கிளி அழகானது

பச்சை - எழுவாய் அடைமொழி

பயனிலை அடைமொழி

பயனிலை பற்றிய செய்தி விளக்கம் பயனிலை அடைமொழி எனப்படும்.

உதாரணம் : மயூரன் உழைப்பால் உயர்ந்தவன்

உழைப்பால் - பயனிலை அடைமொழி

செயற்படுபொருள் அடைமொழி

செயற்படுபொருளை விஷேடிப்பது செயற்படுபொருள் அடைமொழி எனப்படும்.

உதாரணம் : கனிமொழி அழகான ஓவியம் வரைந்தாள்.

அழகான - செயற்படுபொருள் அடைமொழி

**ச. கயல்வேந்தன்**

## எதிர்ப்பாற்சொற்கள் (அஃறிணைக்குரியவை)

| ஆண் | | பெண் |
|---|---|---|
| கடா | - | மறி |
| களிறு | - | பிடி |
| கடுவன் | - | மந்தி |
| சேவல் | - | பேடு |
| ஆண் | | பெண் |
| அலவன் | - | பெட்டை |
| கடுவன் | - | பெட்டை |
| கலை | - | பிணை |
| எருது | - | பசு |



**பா. கலையரசன்**

ஆதவன் முன்பள்ளிச்சிறார்களின் வருடாந்த கலைவிழா நிகழ்வுகள் – 2012

















# ஆதவன் முன்பள்ளிச்சிறார்களின் வருடாந்த கலைவிழா நிகழ்வுகள் – 2012









## தொடர்மொழிக்கு ஒரு மொழி



1. வெளிப்படைப்பொருளில் புகழ்ந்தும் மறைபொருளில் இகழ்ந்தும் கூறுவது
   - அங்கதம்
2. வேறு துணையில்லை என ஒருவரிடம் தன்னை ஒப்படைத்தல் - சரணாகதி
3. வறியவர்களுக்கும் அங்கவீனர்களுக்கும் முதியோருக்கும் உண்டியும் உறையுளும் அளித்து ஆதரவளிக்கும் இடம்
   - ஆதுலர்சாலை
4. நிலத்தில் உரிமை கொண்டாடுவதற்குச் சான்றாக எழுத்துருவில் அமைந்த பத்திரம்
   - உறுதி அல்லது ஆவணம்
5. தனக்கே உரிமையான முழுப்பொருளையும் அனுபவித்தல்
   - ஏகபோகம்
6. சொத்தை அனுபவிக்கும் உரிமையுடன் கூடிய அடைமானம்
   - ஒற்றி
7. ஒருவர் பாடிய முதற்கவிதை - கன்னிக்கவிதை
8. வைத்தியரின்றித் தாமே தமது நோய்க்குச் செய்துகொள்ளும் மருந்து - கைம்மருந்து
9. இருபொருள் அமையத் தொடுப்பது - சிலேடை
10. கொலை, களவு, கள், பொய், குருநிந்தை எனும் பாவங்கள்
    - பஞ்சமாபாதகம்

**யோ. வித்தகன்**

## பொதுப்பெயர்கள்



| | | |
|---|---|---|
| பிள்ளை | அகதி | தளபதி |
| மேதை | அறிவாளி | விவேகி |
| மந்திரி | சோம்பேறி | உலோபி |
| ஏழை | சிற்பி | நோயாளி |
| ஞானி | புத்திசாலி | வியாபாரி |

**க. பவதாரகன்**

## எதிர்ப்பாற்சொற்கள் (உயர்திணைக்குரியவை)



| | | |
|---|---|---|
| அரசன் | - | அரசி |
| அடியான் | - | அடியாள் |
| ஆசிரியன் | - | ஆசிரியை |
| இடையன் | - | இடைச்சி |
| தோழன் | - | தோழி |
| நல்லான் | - | நல்லாள் |
| நண்பன் | - | நண்பி |
| தம்பி | - | தங்கை |
| பாட்டன் | - | பாட்டி |
| பாடகன் | - | பாடகி |
| உழவன் | - | உழத்தி |
| சிறுவன் | - | சிறுமி |
| தலைவன் | - | தலைவி |
| தந்தை | - | தாய் |
| செல்வன் | - | செல்வி |
| நடிகன் | - | நடிகை |
| பேரன் | - | பேத்தி |
| புத்திரன் | - | புத்திரி |
| புதல்வன் | - | புதல்வி |
| உத்தமன் | - | உத்தமி |

**க. திகழ்ச்சுடர்**

### காய்கறிகள்



காய்கறியாம் காய்கறி
காலையில் பறித்த காய்கறி

கத்தரி வெண்டி தக்காளி
கரட் பூசணி பாகற்காய்

சத்து நிறைந்த காய்கறி
சந்தைக்கு வரும் காய்கறி

பச்சை நிறக் காய்கறி
பசுமையான காய்கறி



காய்கறியாம் காய்கறி
கண்ணைக் கவரும் காய்கறி

**கு. மதுவந்திகா**

## விழாக்கள்



- இருபத்தைந்தாவது ஆண்டின் இறுதியிற் கொண்டாடப்படும் விழா - வெள்ளிவிழா
- ஐம்பதாவது ஆண்டின் இறுதியிற் கொண்டாடப்படும் விழா - பொன்விழா
- அறுபதாவது ஆண்டின் இறுதியிற் கொண்டாடப்படும் விழா - வைரவிழா
- எழுபத்தைந்தாவது ஆண்டின் இறுதியிற் கொண்டாடப்படும் விழா - பவளவிழா
- நூறாவது ஆண்டின் இறுதியிற் கொண்டாடப்படும் விழா - நூற்றாண்டுவிழா

ச. நிருசன்

## The Clever Mouse



The little mouse was amused to see a big bull sleeping and snoring loudly. Out of sheer fun he pricked the Bull's nose.

The Bull woke up and saw the Mouse running away. He lost his head and ran after the Mouse. "I will reach the small creature a lesson", he decided.

The Mouse took shelter into a hole in the wall. The Bull hit the wall with his head, injuring himself. The Mouse was still safe in the hole.

The Bull charged against the wall again. But it only further injured his head. Nothing happened to the mouse. From the safe distance the little Mouse challenged the big Bull. You cannot have everything your own way. Remember, might is not always right.

**Moral - It is better to be safe than sorry**

**T. Kabilan**

# The Mongoose and the Snake



The Hunter and his dog were combing the jungle for rabbits. Suddenly they stopped, struck by a strange sight

A Mongoose and a Snake were engaged in a life and death struggle. The powerful reptile was furiously hissing and trying to bit the Mongoose. While the Mongoose was saving himself from the bites as well as counter – attacking the snake with his claws. The Hunter decided to end the fight. He shot the Mongoose.

But in a moment his dog was crying with pain, and then dropped dead. The snake had bitten him since his enemy, the Mongoose was no more. "Oh, I had ignored the deadly Snake. Had I not stop the mongoose there would have been one snake less, and my dog alive," the Hunter lamented.

**Moral: Be careful in choice of your enemies.**

**M. Santhaseelan**


## இளமை மரபுப் பெயர்கள் - தாவரங்கள்



| | | |
|---|---|---|
| கமுகு | - | கன்று, பிள்ளை |
| பனை | - | வடலி |
| மா | - | கன்று |
| வேம்பு | - | கன்று |
| நெல் | - | நாற்று |
| பலா | - | கன்று |
| வாழை | - | குட்டி |

**ஜெ. பிறைநிலவன்**

## ஆதவன் முன்பள்ளிச்சிறார்களின் வருடாந்த விளையாட்டு நிகழ்வுகள் – 2012



















## விஜயதசமி நிகழ்வுகள் – 2012







## ஒலி வேறுபாடு



| | |
|---|---|
| வலை | - வலையில் மீன்கள் அகப்பட்டன. |
| வளை | - வளையில் எலிகள் ஓடின. |
| வலி | - கண்ணில் வலி உண்டானது. |
| வளி | - வளி மாசடையாது பாதுகாப்போம். |
| வழி | - வழியில் நண்பனைக் கண்டேன். |
| ஒலி | - சதங்கையின் ஒலி கேட்டது. |
| ஒளி | - சூரிய ஒளி பிரகாசித்தது. |
| ஒழி | - நுளம்புகளை ஒழிப்போம். |
| கூரை | - வீட்டுக் கூரையில் காகம் இருந்தது. |
| கூறை | - அம்மா கூறைச் சேலை வாங்கினார். |

க. குவியன்பன்

## இளமை மரபுப் பெயர்கள்
### விலங்குகள்

| | |
|---|---|
| குரங்கு | - குட்டி, பறள் |
| அணில் | - பிள்ளை, குஞ்சு |
| யானை | - குட்டி, கன்று |
| கீரி | - பிள்ளை, குட்டி |
| ஆடு | - குட்டி |
| தவளை | - குஞ்சு, பேத்தை |
| மான் | - குட்டி, கன்று |
| மீன் | - குஞ்சு |
| பாம்பு | - குட்டி |
| குதிரை | - குட்டி |
| கிளி | - குஞ்சு, பிள்ளை |
| புலி | - குட்டி, குருளை |
| பூனை | - குட்டி, பறள் |



க. கஜானனன்

## தொடர்மொழிக்கு ஒரு மொழி



1. ஒரு நூலைப் பதிப்பிப்போர் அந்நூலைப் பற்றிக் கூறும் உரை - பதிப்புரை
2. இறந்த போர்வீரனின் புகழ் கருதி நடப்படும் கல் - நடுகல்
3. அறிஞர்கள் கூடி வாதிடும் களம் - பட்டிமன்றம்
4. ஒரு தண்டில் பல மலர்கள் மலர்ந்துள்ள பூங்கொத்து - மஞ்சரி
5. நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்பன - ஐம்பூதங்கள்
6. உப்பின்றிச் சமைத்த அரிசிச் சாதம் - அவிசு
7. விசாரணையின் முடிவில் நீதிபதியால் வழங்கப்படுவது - தீர்ப்பு
8. தேர்தல் ஒன்றில் போட்டியிடுபவர் - வேட்பாளர்
9. வீண்செலவு செய்பவன் - ஊதாரி
10. அனைத்து உடமைகளையும் இழந்தவன் - அகதி

**இ. தமிழ்க்குமரன்**

## தொனிகள்




| | |
|---|---|
| ஆடு | - கத்தும் |
| எருது | - முக்காரம் போடும் |
| கரடி | - கத்தும் |
| குதிரை | - கனைக்கும் |
| நரி | - ஊளையிடும் |
| பசு | - கதறும் |
| பன்றி | - உறுமும் |
| அணில் | - கீச்சிடும் |
| தவளை | - கத்தும் |
| யானை | - பிளிறும் |
| ஆந்தை | - அலறும் |
| காகம் | - கரையும் |

**ஜெ. அபிநயன்**

## அடுக்கு மொழிகள்

- சுடச்சுட
- மேலே மேலே
- இருந்து இருந்து
- பக்கம் பக்கம்
- வண்ண வண்ண
- வழி வழி
- பெரிய பெரிய
- மெய் மெய்
- ஏறி ஏறி
- சின்னச் சின்னச்
- தனித் தனி
- சிரித்துச் சிரித்து
- அழுது அழுது
- அணு அணு
- தெருத்தெரு
- இரத்தம் இரத்தம்
- கற்றை கற்றை
- சிறிய சிறிய
- நடுங்கி நடுங்கி
- பதைத்துப் பதைத்து
- கரிய கரிய



சி. சாதுரியன்

## இணை மொழிகள்

| | | |
|---|---|---|
| அக்கம் பக்கம் | - | அருகருகே |
| அங்கும் இங்கும் | - | பல பக்கமும் |
| அல்லும் பகலும் | - | நாள் முழுவதும் |
| அரைகுறை | - | முற்றுப்பெறாமை |
| ஆறஅமர | - | அமைதியாக |
| ஆடிப்பாடி | - | ஆனந்தமாக |
| இன்பதுன்பம் | - | சுக துக்கம் |
| இங்குமங்கும் | - | எல்லாப்பக்கமும் |
| இடைக்கிடை | - | இடைவிட்டு |
| ஈவிரக்கம் | - | மனக்கசிவு |
| உண்டுடுத்து | - | அனுபவித்து |
| உள்ளும் புறமும் | - | எல்லாவிடமும் |
| உயர்வு தாழ்வு | - | ஏற்ற இறக்கம் |
| ஓடியாடி | - | முயற்சியுடன் |
| கிட்டத்தட்ட | - | ஏறக்குறைய |
| சண்டை சச்சரவு | - | அடிபிடி |



ஜெ. அர்ச்சனன்

## மரபுத்தொடர்



| | |
|---|---|
| அமளி செய்தல் | - குழப்பம் செய்தல் |
| கைகொடுத்தல் | - உதவுதல் |
| அறை கூவுதல் | - போருக்கு அழைத்தல் |
| ஆழம் பார்த்தல் | - திறமையாக ஆராய்தல் |
| ஆறப்போடுதல் | - பிற்போடுதல் |
| இழுத்துப் பறித்தல் | - முயன்று செய்தல் |
| கண்வைத்தல் | - விருப்பம் கொள்ளுதல் |
| கண்ணாயிருத்தல் | - கவனமாயிருத்தல் |
| கைகுவித்தல் | - வணங்குதல் |
| கை தேர்தல் | - திறமை மிகுதல் |
| அள்ளி இறைத்தல் | - அதிகமாகச் செலவு செய்தல் |
| கைதளர்தல் | - சோர்தல் |

ச. யதுசன்

## இணைமொழிகள் அமைந்த கதைப்பகுதி



அது ஒரு பெரிய காடு. மாதவன் அங்குமிங்கும் பார்த்தான். ஒருவரையும் காணவில்லை. சுற்றுலா வந்த நண்பர்களைத் தவறவிட்டு விட்டேனே! என்ன செய்வதென்று ஆற அமர அவனால் சிந்திக்க முடிவில்லை. கண்ணும் கருத்துமாக வளர்த்த பெற்றோர் மட்டுமே அவன் கண்முன்னே தோன்றினர். அவன் கால் போன போக்கில் நடக்கலானான். காட்டுப் பாதையோ கரடுமுரடு: எங்கும் கஞ்சல் குப்பைகள். பருகுவதற்கு நீர்நிலைகளும் இல்லை. குளங்கள் வற்றி வரண்டு காணப்பட்டன. தூரத்தே மாதவா! மாதவா! என்று கூப்பிடும் சத்தம் எதிரொலித்தது. திரும்பிப் பார்த்தான். தூரத்தே வகுப்பாசிரியர் பதற்றத்துடன் வந்துகொண்டிருந்தார். மாதவன் வகுப்பாசிரியரைக் கண்டதும் அவரை நோக்கி ஓடினான்.

இ. கோவர்ணன்

## விளம்பரம்

சிறுவர்களே வாங்கிவிட்டீர்களா?

**'தேன்துளி'**

*சிறுவர்களுக்காக வண்ணத்தில் வெளிவரும் தமிழ்ச்சஞ்சிகை*



இம்மாத இதழில்

- கணினியின் புதிய வரவு
- வாசிக்கத்தூண்டும்
  - ✓ அறிவியல் தகவல்கள்
  - ✓ நகைச்சுவைக் கதைகள்
  - ✓ புதிர்க்கதைகள்
- விளையாட்டு வீரர்களின் விளையாட்டுத் தொடர்
- வியப்பூட்டும் கடல் உயிரினங்கள்
- சித்திரக்கதைகள்
- 50 நகைச்சுவைத் துணுக்குகள்
- சவாலை வெல்லுங்கள் - பரிசுப் போட்டி

இன்னும் சுவையான அம்சங்களுடன் கண்ணைக் கவரும் வண்ணத்தில்

உடனே வாங்குங்கள். வாசித்துப் பயனைப் பெறுங்கள்.

கிடைக்குமிடம் - ஆதவன் முன்பள்ளி.

**பா. பிரணவன்**

## பாடல் (ஒத்தஓசை)



தட்டு தட்டு தட்டு
தட்டு கையைத் தட்டு
சிட்டு சிட்டு சிட்டு
சிட்டுக் குருவி சிட்டு!

பட்டு பட்டு பட்டு
பட்டுச் சட்டை பட்டு!
பொட்டு பொட்டு பொட்டு
பொட்டு நெற்றிப் பொட்டு!

மொட்டு மொட்டு மொட்டு
மொட்டு மல்லிகை மொட்டு!
தட்டு தட்டு தட்டு
தட்டு கையைத் தட்டு!

**இ. தர்மிகன்**

# கடிதம் (மாதிரி)

இல. 09, மூன்றாம் குறுக்குத்தெரு,
கனகபுரம்,
கிளிநொச்சி.
11.12.2012



அன்புள்ள தங்கைக்கு,

வணக்கம். நான் நலம். நீயும் நலமாக இருக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். உனது கடிதம் கிடைத்தது. ஆரோக்கிய வாழ்வுக்கு தடையாக இருப்பவை பற்றிக் கேட்டிருந்தாய். அதனைப் பற்றிக் கூறுவதற்காகவே இக்கடிதத்தை எழுதுகின்றேன். காற்றில் சேருகின்ற தூசு மட்டுமே ஆபத்து என்று பலர் கருதுகின்றனர். தூய்மைக்கேடு என்பது ஒலியிலும் உண்டு. அன்றாடம் நாம் பல ஒலிகளைக் கேட்கின்றோம். இனிமையில்லாத ஒலியைச் சத்தம் என்கின்றோம். விற்பனை அங்காடிகளில் ஒலி பெருக்கிகள் ஒலிக்கின்றன. தொழிற்சாலைகள் விமான நிலையங்கள், புகையிரத நிலையங்கள், கட்டட நிர்மாணம் செய்யும் இடங்கள் போன்றவற்றில் விதவிதமான ஒலிகள் எழுகின்றன.

இப்படி விரும்பத்தகாத ஒலிகளை ஒருவன் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருப்பானேயானால் அவனுக்குக் கேட்கும் திறன் குறைந்து விடும். நோய்களுக்கும் உள்ளாக நேரிடும். சிலவேளை மனநோயாளியாக மாறவும் வாய்ப்புக்கள் உண்டு. பெரும் சத்தங்களை மிருகங்களின் மீது ஏவச் செய்து சோதனைகள் நடத்தியதில் அவை மரணமடைந்தமையையும் கண்டிருக்கின்றார்கள்.

இது தொடர்பாக மேலதிக தகவல்களை அடுத்த கடிதத்தில் எழுதுவேன்.

நன்றி.

இப்படிக்கு,
பாசமுள்ள அண்ணா,
சி. சுலக்சன்.

சி. சுலக்சன்

# ஆதவன் முன்பள்ளிச்சிறார்களின் வருடாந்த கலைவிழா நிகழ்வுகள் – 2012

















## தொடர்மொழிக்கு ஒரு மொழி



1. நகருக்கு வெளியே மக்கள் வாழுமிடம் - புறஞ்சேரி
2. அறம், பொருள், இன்பம், வீடு எனும் நாற்பொருள் - புருடார்த்தம்
3. பொதுமக்களிற்காக அரங்கிலே ஆடப்படும் கூத்து வகை - பொதுவியல்
4. மற்றவர்களைப் பற்றி அக்கறை இல்லாதவன் - சுயநலவாதி
5. நடக்க இருப்பவற்றை முற்கூட்டியே கூறுபவன் - தீர்க்கதரிசி
6. அகரவரிசைப்படி சொற்களுக்குப் பொருள் கூறும் நூல் - அகராதி
7. நிகழ்ச்சி ஒன்றை மேடையேற்ற முன் நிகழ்த்திப் பார்ப்பது - ஒத்திகை

**ரா. இசைப்பிரியன்**

## வேப்பமரம்



நண்பர்களே!

என்னைத் தெரிகிறதா?
நான்தான் வேப்பமரம் பேசுகின்றேன்.
நீங்கள் நலமாக இருக்கின்றீர்களா?
நான் நலமாக இல்லை.
நீங்கள் மரங்களை வெட்டுகின்றீர்களே!
பிறகு எப்படி நாம் நலமாக இருக்க
முடியும்.
எங்கள் சேவையைப் புரிந்து
கொள்கிறீர்களில்லையே.
மழையைத் தர உதவுகின்றோம்
மண்சரிவை தடுக்க உதவுகின்றோம்
மண்வளத்தை காக்க உதவுகின்றோம்
எங்கள் சேவை இவ்வுலகத்திற்குத் தேவை
ஏன் இதனைப் புரிந்துகொள்ள மறுக்கிறார்கள்
வேதனையாக இருக்கின்றது.

**வி. கிளியரசன்**


## கூட்டல் கணக்கு

ஒன்றும் ஒன்றும் இரண்டு
கையில் பிடிப்பது செண்டு
இரண்டும் இரண்டும் நாலு
பசு கறப்பது பாலு
மூணும் மூணும் ஆறு
ரோசாப் பூவைப் பாரு
நாலும் நாலும் எட்டு
நெத்தியில் வைப்பது பொட்டு
ஐந்தும் ஐந்தும் பத்து
அம்மா வைப்பது குத்து



ஜெ. சங்கீதன்

## சொர்க்கம்



பெர்னாட்ஷா பள்ளியில்படித்துக் கொண்டிருந்தபோது சக மாணவர்கள் அவரை மட்டந்தட்டிக்கொண்டே இருப்பார்கள். அவர்களுக்குப் பாடம் புகட்ட சரியான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து காத்துக் கொண்டிருந்தார்.

ஒரு நாள் வகுப்பாசிரியர் மாணவர்களைப் பார்த்து "உங்களில் சொர்க்கத்திற்குப் போக விரும்புகிறவர்கள் எழுந்து நில்லுங்கள்!" என்றார். உடனே பெர்னாட்ஷாவைத் தவிர அனைவரும் எழுந்து நின்றனர். ஆசிரியர் "உனக்கு மட்டும் சொர்க்கத்திற்குப் போக விருப்பம் இல்லையா?" என்று பெர்னாட்ஷாவிடம் கேட்டார்.

உடனே பெர்னாட்ஷா, "எனக்கும் விருப்பம்தான், ஆனால் இவர்களெல்லாம் சொர்க்கத்திற்குப் போன பிறகு அது சொர்க்கமாகவா இருக்கும்!" என்றார். மாணவர்கள் முகத்தில் ஈயாடவில்லை.

ஜெ. ஆத்மீகன்

# My Hobby



A hobby is a work that one does in one's free time.

My hobby is stamp collecting. I have more than two hundred stamps in my album.

I have received most of them through letters sent to me by my friends.

Others I have collected from my parents and uncle.

Stamps are issued by different countries. They are often colorful. They show pictures of famous people, birds, animals, plants and places.

Except Great Britain, every stamp carries the name of the country.

Whenever I get a letter, I take off the stamp carefully and stick it in my album.

I get information about the country from the stamps.

The hobby of collecting stamps is very interesting.

S.Vipusan

# கண் தெரியுமா?

ஆந்தைகளைப் பற்றி பாடம் நடத்தி முடித்துவிட்டு கேள்விகளைக் கேட்க ஆரம்பித்தார் ஆசிரியர். என் நண்பனிடம் "ஆந்தைக்கு இரவில் கண் தெரியுமா"? என்று கேட்டார். "எனக்குத் தெரிய்வில்லை ஐயா" என்றான். "உனக்குத் தெரியுமா என்று நான் கேட்கவில்லை. ஆந்தைக்குத் தெரியுமா? என்று மீண்டும் கேட்டார் ஆசிரியர். "ஐயா, பதில் எனக்குத் தெரியவில்லை என்று சொன்னேன்" என்றான். "ஒழுங்காகக் கவனித்திருந்தால் தானே பதில் சொல்ல முடியும்" என்றார் ஆசிரியர்.



க. கயலக்ஷசர்மா

## பெயராகவும் வினையாகவும் வரும் சொற்கள்

| சொல் | பெயர் | வினை |
|---|---|---|
| அடி | பாதம் | அடித்தல் |
| அமர் | போர் | அமர்தல் |
| அலை | கடலலை | திரிதல் |
| இரை | உணவு | ஒலிசெய் |
| உடை | ஆடை | உடைத்தல் |
| கலை | வித்தை | கலைத்தல் |
| நகை | அணிகலன் | சிரி |
| நாடு | தேசம் | தேடு |



ர. அருளினியன்

## ஒலிவேறுபாடுடைய சொற்கள்



அ. அக்குமரன்

1. மனிதர்களுக்கு உள்ளது *மனம்.*
   மலரிலிருந்து வீசுவது *மணம்.*
2. வீட்டில் வளர்ப்பது *மரம்.*
   வீரத்தின் மறு பெயர் *மறம்.*
3. ஆற்றில் வருவது *வெள்ளம்.*
   எறும்பு விரும்புவது *வெல்லம்.*
4. உணவின் மறுபெயர் *ஊண்.*
   உடம்பின் மறுபெயர் *ஊன்.*
5. காட்டில் வாழ்வது *புலி.*
   கறிக்குச் சேர்ப்பது *புளி.*



சி. கலைக்கதிர்

## திசாவன் - திசைகள்

| சிங்களம் | | தமிழ் |
|---|---|---|
| உத்துர | - | வடக்கு |
| தக்குண | - | தெற்கு |
| நகெனகிர | - | கிழக்கு |
| பட்டஹிர | - | மேற்கு |
| ஈசான | - | வடகிழக்கு |
| கினிகொண | - | தென்கிழக்கு |
| நிரித்த | - | தென்மேற்கு |
| வயம்ப | - | வடமேற்கு |

## சேர்த்தெழுதுதல்

| | |
|---|---|
| நெல் + வயல் | - நெல்வயல் |
| பல் + பொடி | - பற்பொடி |
| மலை + உச்சி | - மலையுச்சி |
| மரம் + வேர் | - மரவேர் |
| முள் + செடி | - முட்செடி |
| தமிழ் + சொல் | - தமிழ்ச்சொல் |
| தேயிலை + நீர் | - தேநீர் |
| தேன் + நீர் | - தேனீர் |
| மண் + குடம் | - மட்குடம் |
| மலர் + செண்டு | - மலர்ச்செண்டு |



சு. அரசமாறன்

## மிருகக் காட்சிச்சாலைக்குச் சென்ற அனுபவம்



நான் எனது பெற்றோருடன் காலை ஒன்பது மணியளவில் மிருகக் காட்சிச் சாலைக்குச் சென்றேன். மிருகக் காட்சிச்சாலையைப் பார்வையிடுவதற்காக நுழைவுச் சீட்டை எனது பெற்றோர் பெற்றுக் கொண்டனர்.

முதல் அங்குள்ள வண்ணப் பறவைகளைப் பார்வையிட்டேன். அதன்பின்னர் அழகிய மீனினங்களைப் பார்வையிட்டேன். அபூர்வ மீனினங்களைப் பார்த்து ஆச்சரியமடைந்தேன். மீனினங்களைப் பார்வையிட்ட பின் பாம்பினங்களைப் பார்வையிட்டேன். அனகொண்டா பாம்பினத்தைப் பார்க்கும் போது எனக்குப் பயமாக இருந்தது. அதனால் அவ்விடத்தை விட்டு அகன்று நீரில் வாழும் உயிரினங்களைப் பார்வையிடுவதில் கவனத்தைச் செலுத்தினேன்.

இறுதியாகப் பலவகையான மிருகங்களைப் பார்த்து மகிழ்ந்தேன். அன்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் "யானை நடனம்" இடம்பெறும் என்று அங்குள்ளவர்கள் என் பெற்றோரிடம் கூறினார்கள். அதனால் மாலை ஐந்து மணிவரை நடனத்தைப் பார்த்துவிட்டு எனது பெற்றோருடன் வீடு திரும்பினேன்.

ச. யதுசன்

## ஒலி வேறுபாடு



இரங்கு - ஏழைகளுக்கு இரங்குதல் வேண்டும்.
இறங்கு - மாலதி படியிலிருந்து இறங்கினாள்.
கரை - கடற்கரையில் படகுகள் கண்டோம்.
கறை - ஆடையில் கறை படிந்தது.
மனம் - மாலாவின் மனதில் மகிழ்ச்சி ஏற்பட்டது.
மணம் - பூவில் நறுமணம் உண்டு.
பானம் - நாம் குளிர்பானம் அருந்தினோம்.
பாணம் - வேடன் வில்லை வளைத்துப் பாணம் தொடுத்தான்.
ஊன் - ஊன் உணவைச் சிலர் விரும்புவதில்லை.
ஊண் - ஊணும் உறக்கமும் உடலுக்கு அவசியம்.

**ர. பிறைநிலா**

## உதவப்பழகு



பசு என்ன செய்யும்?
பாலைத் தந்து உதவும்.
காளை என்ன செய்யும்?
காலம் உழுது உதவும்.

நாய் என்ன செய்யும்?
நன்றியோடு பழகும்.
பூனை என்ன செய்யும்?
புரட்டு எலியை விரட்டும்.

மரம் என்ன செய்யும்?
மழை வர உதவும்.
செடி என்ன செய்யும்?
சின்னப் பூக்கள் சிந்தும்.

எதுவும் நமக்கு உதவும்.
இயற்கை தந்த வாறு,
உதவும் அவற்றைப் பாரு
உதவி செய்யப் பழகு

**அ. அரிஷ்னா**

# நிலையான தோல்வியில்லை



செல்வனே!
நீ ஏழைகள் ஆயிரம் பேருக்கு
எஜமானாக இருக்கலாம்
ஈ எறும்பு ஒன்றுக்காவது
எஜமானாக முடியுமா?

உன் பத்து ரூபாய்
நோட்டுக்குப் பத்துபேர்
வரலாம். பத்தாயிரம்
நீட்டு, பட்டாம் பூச்சி வருமா?

உட்கார்ந்திருப்பது உன்
தோட்டத்துப்பூவில்
என்றாலும், உன்
வருகையைக் கண்டு
வண்டு எழுந்திருக்குமா?

நீ ஒரு தேன் கூட்டைத்
தொடு, நீ செல்வனாயிற்றே
என்று ஒரு தேனீயாவது உன்னை
முத்தமிட்டுப் பறக்குமா?

நீயும் உன் பணமும் பெறுவது
நிலையான வெற்றியுமல்ல
நாங்களும் எங்கள்
ஏழ்மையும் பெறுவது
நிலையான தோல்வியும் அல்ல.

சி. தர்மினி

# My favourite fruit



The mango is a very sweet fruit. It grows on the mango tree.
It is called the king of fruit.
Mangoes grow in hot countries. Mangoes grow in India too.
We get mangoes in the summer season.
Ripe mangoes are yellow or orange in colour.
They are sweet to taste.
Unripe mangoes are used in preparing pickles.
They are sure into taste.
Mangoes are also used to make ice – cream and shakes.
I like mangoes very much.
The mango is my favourite fruits.

K. Makilkani

## கூட்டத்தைக் குறிக்கும் மரபுச் சொற்கள்



- ஆட்டுமந்தை
- நெற்குவியல்
- முகிற்கூட்டம்
- தென்னந்தோப்பு
- கற்குவியல்
- கல்வரிசை
- மலர்ச்செண்டு
- சனத்திரள்
- பூங்கொத்து
- வைக்கோல் கற்றை
- பழக்குலை
- மாஞ்சோலை

### நிறுத்தற் குறிகள்

1. (.) - முற்றுப்புள்ளி
2. (,) - காற்புள்ளி
3. (?) - வினாக்குறி
4. (!) - வியப்புக்குறி
5. ("...") - மேற்கோட்குறி

சோ. கயலரசி

# எமது நாடு



- எமது நாடு இலங்கை.
- இது நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட ஒரு தீவு ஆகும்.
- இலங்கை 1948ஆம் ஆண்டு சுதந்திரம் அடைந்தது.
- இலங்கை 1972ஆம் ஆண்டு குடியரசாக மாறியது.
- தேசிய கீதம் பிரபல இசையமைப்பாளர் ஆனந்த சமரக்கோன் அவர்களால் இயற்றப்பட்டது.
- தேசிய கீதத்தை தமிழில் மொழிபெயர்த்தவர் முதுதமிழ்ப்புலவர் மு. நல்லதம்பி அவர்கள் ஆவார்.
- இலங்கையின் முதலாவது பிரதமர் டி.எஸ். சேனநாயக்க ஆவார்.
- இலங்கையின் மிக நீளமான நதி மகாவலி கங்கை.
- இலங்கையின் உயரமான மலை பேதுருதாலகால மலை.
- இலங்கையின் மிக நீளமான நீர்வீழ்ச்சி பம்பரகந்தை.
- இலங்கையின் தேசியப் பறவை காட்டுக்கோழி.
- இலங்கையின் தேசிய மரம் நாகமரம்.
- இலங்கையின் தேசிய மலர் நீலோற்பலம்.
- இலங்கையில் இலவசக் கல்வியின் தந்தை சி.டபிள்யூ.டபிள்யூ கன்னங்கரா ஆவார்.
- இலங்கையின் இயற்கைத் துறைமுகம் திருகோணமலையில் அமைந்துள்ளது.
- இலங்கையின் மிகப்பெரிய தாவரவியற் பூங்கா பேராதனையில் அமைந்துள்ளது.

சு. பவித்ரா

# துண்டுப்பிரசுரம்

## அபாயம் நெருங்குகின்றது



பொதுமக்களே!

சூழலைப் பாதுகாக்க வேண்டியது எமது கடமையல்லவா!

- காற்று அசுத்தமாகி வருகின்றது.
- நீர் அசுத்தமாகி வருகின்றது.

இது பற்றிச் சிந்தித்ததுண்டா!

காற்று எவ்வாறு அசுத்தமாகிறது தெரியுமா?

- குப்பைகளை எரிப்பதால்
- தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் புகையால்
- வாகனங்களிலிருந்து வெளிவரும் புகையால்.

நீர் எவ்வாறு அசுத்தமாகிறது தெரியுமா?

- குப்பைகளை ஆற்றில் கொட்டுவதால்
- பயிர்ச்செய்கையின் போது கிருமிநாசினிகளையும், உரங்களையும் பயன்படுத்துவதால்
- கழிவுநீர் ஆற்றில் கலப்பதால்.

நீங்கள் நோயாளியாகப் போகின்றீர்களா?
இதற்கெல்லாம் காரணம் யார்?
சிந்தியுங்கள், உண்மை புரியும்.
சூழலைப் பாதுகாக்க எம்முடன் இணையுங்கள்.

*- சூழலை பாதுகாக்கும் நண்பர்கள் அமைப்பு.*

**ப. எழிலரசி**

# டெங்குக் காய்ச்சலைத் தவிர்த்துக் கொள்வோம்



டெங்குக் காய்ச்சல் வைரஸ் கிருமியினால் தொற்றும் ஒரு நோயாகும். டெங்குக் காய்ச்சல் ஈஸ்டிஸ், ஈஜிப்டய், ஈடிஸ் அல்போபிக்டஸ் என்னும் இருவகை நுளம்புகளினாலே பரவுகின்றது.

டெங்குக் காய்ச்சலை நாம் தடுக்க என்ன செய்யவேண்டும்? டெங்குக் காய்ச்சலைப் பரப்பும் நுளம்புகள் பரவாமல் தடுக்க வேண்டும். அவை பரவும் இடங்களைக் கண்டறிந்து அழிக்க வேண்டும். அதற்குப் பின்பற்ற வேண்டிய வழிகள் எவை தெரியுமா?

வெற்றுத் தகரடப்பாக்கள், சட்டி, பானைகள், வெற்றுத்தயிர்ச் சட்டிகள், பயன்படுத்தப்பட்ட யோக்கற் கோப்பைகள், போத்தல்கள் ஆகியவற்றில் நீர் தேங்காமல் உடைத்து துண்டுகளாக எறிதல் வேண்டும். அல்லாவிடில் குழிதோண்டிப் புதைத்தல் வேண்டும். இளநீர்க் கோம்பைகள், தேங்காய்ச் சிரட்டைகள் ஆகியவற்றில் தண்ணீர் தேங்காமல் அவற்றைச் சிறுசிறு துண்டுகளாக வெட்டுதல் வேண்டும். இந்த வழிகளில் மட்டும் தான் நுளம்புகள் பெருகும் என்று நினைக்கின்றீர்களா? இல்லை. வீட்டில் பூச்சாடிகளின் கீழ் வைக்கப்படும் நீர்ச்சட்டிகள் மூலமும் நுளம்புகள் பரவுகின்றன.

இதற்கு மாற்று வழிதான் என்ன? இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு ஒருமுறை பூச்சட்டிகளில் உள்ள நீரை மாற்றுதல் வேண்டும். மீண்டும் நீரை மாற்றும் போது உப்புக்கட்டியொன்றை இடுவதன் ஊடாக நுளம்புப் பெருக்கத்தைத் தடுக்க முடியும்.

த. வருணிகா

# நிகழ்ச்சி நிரல்

பாடசாலை பரிசளிப்பு விழா

இடம் : பிரதான மண்டபம்


திகதி : 30.10.2012

நேரம் : பி.ப 12.00 மணி



1. இறைவணக்கம்
2. மங்கள விளக்கேற்றல்
3. வரவேற்புரை - துணைஅதிபர்
4. தலைமையுரை - அதிபர்
5. முதன்மை விருந்தினர் உரை
6. பரிசில்கள் வழங்குதல்
7. மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள்
8. நன்றியுரை
9. தேசிய கீதம்

**ம. மகிழருவினி**



## விடுகதைகள்

1. வில்லாய் வளைபவன் ஒருபோதும் ஒடிந்து போகமாட்டான். அவன் யார்? நாணல்
2. அமாவாசைக்கு வயதானால் பௌர்ணமி ஆகும். அது என்ன? தலைமுடி
3. மின்சாரம் இல்லாத வேளையிலும் எரிவான். அவன் யார்? சூரியன்
4. இரண்டு கால்கள் இருப்பவனை விழாமல் பிடித்துக்கொள்ள வேண்டும். அவன் யார்? ஏணி
5. கண்ணுக்கு எட்டியவரை சொட்டு நீலமாய்த் தெரிவான். கையிலெடுத்தால் நிறமில்லாது போவான். அவன் யார்? கடல்
6. வளமாய் வளர்ந்த மரம். வாசற்காலுக்கு உதவாத மரம். அது என்ன? வாழைமரம்
7. குண்டுச்செம்பில் தண்ணீர் இருந்தும், குருவி குடிக்க வழியில்லை. அது என்ன? இளநீர்

**ச. யாழிசை**

## ஆதவன் முன்பள்ளிச்சிறார்களின் வருடாந்த கலைவிழா நிகழ்வுகள் – 2012










ஆதவன் முன்பள்ளிச்சிறார்களின் வருடாந்த விளையாட்டு,
இசையும் அசைவும், பரிசில் வழங்கும் நிகழ்வுகள்— 2012











## அனுதாபம் தெரிவித்தல்



கவலைப்படாதீர்கள். நடந்தது நடந்து விட்டது. எல்லாம் நன்மைக்கே என்று மனதைத் திடப்படுத்திக் கொள்ளுங்கள். தோல்விதான் வெற்றிக்கு முதற்படி. நாங்கள் எல்லோரும் உங்கள் அருகில் இருக்கும் போது நீங்கள் ஏன் கவலைப்பட வேண்டும். தைரியமாக இருங்கள்.

## கோபத்தோடு இருத்தல்

நேரத்திற்கு வரவேண்டும் என்று எத்தனை முறை உங்களுக்குச் சொல்லியிருக்கின்றேன். இதுதான் இறுதி எச்சரிக்கை. இனிமேலும் தாமதமாக வந்தால் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டிவரும்.

## மகிழ்ச்சியை வெளிப்படுத்துங்கள்

"எனது கவிதைக்கு முதற்பரிசு கிடைக்கும் என்று நான் கனவிலும் நினைத்திருக்கவில்லை. எனக்கு என்ன பேசுவதென்றே தெரியவில்லை. முதலில் அம்மாவிடம் சொல்ல வேண்டும்".

## பயத்தோடு கூறுதல்

அம்மா.... நான்....... நா..... ன்.... பேனாவைத் தொலைத்து விட்டேன்...... அம்மா.. இனிமேல் தொலைக்கவே..... மாட்டேன்....

## துக்கத்தினை வெளிப்படுத்தல்

நாம் எல்லோரும் ஒன்றாகப் படித்தோம். இன்ப, துன்பங்களில் பங்கு பற்றினோம். இன்றுடன் பிரியப்போகின்றோம் என்பதை நினைத்துப் பார்க்க முடியவில்லை. ... இதற்குமேல் என்னால்... பே... ச.. முடியவில்லை...

ந. புகழினி

## விடா முயற்சி



ஊக்கமும் விடாமுயற்சியும் வெற்றிக்கு ஏணிப்படிகள். இன்று நம் வீடுகளில் மின் விளக்குகள் எரிகின்றன. ஒன்றரை நூற்றாண்டுக்கு மேல் இந்த மின்விளக்குகள் நம்மிடையே இல்லை. தோமஸ் அல்வா எடிசன் என்பவர் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மின்விளக்கைக் கண்டுபிடிக்க ஆராய்ச்சி செய்தார். தமது முதல் முயற்சியிலே தோல்வி கண்டார். தொடர்ந்தும் தனது ஆய்வைத் தொடர்ந்தார். பல முறைகள் தோல்வியைக் கண்ட அவர் இறுதியிலே தமது ஆராய்ச்சியில் வெற்றி கண்டார். மின் விளக்கு எரியத் தொடங்கியது. "முயற்சி திருவினையாக்கும்" என்பதற்கு இணங்க வெற்றி பெற்றார். இன்றும் வீடுகளிலே மின் விளக்குகள் எரிய முன்னோடியாகத் திகழ்ந்த அறிவியல் மேதை தோமஸ் அல்வா எடிசன் ஆவார்.

அ. யதூர்த்திகன்

## ஆண் பெண் மரபு



| உயிரினம் | ஆண் | பெண் |
|---|---|---|
| ஆடு | கடா | மறி |
| மாடு | காளை, எருது | நாகு, பசு |
| கோழி | சேவல் | பேடு |
| நாய் | கடுவன் | பெட்டை |
| யானை | களிறு | பிடி |
| குரங்கு | கடுவன் | மந்தி |
| பூனை | கடுவன் | பெட்டை |
| மான் | கலை | பிணை |
| குதிரை | குண்டு | வடவை, பெட்டை |
| மயில் | போத்து | அளகு |

இ. கிசோன்

## விடுகதைகள்



